**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 3, கோவை**

**முன்னிலை : திரு.ஆ.வெங்கடேஷ்குமார், B.A.,B.L.,(Hons.),L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண் 3, கோவை**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ம் தேதி திங்கள்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 660/2023**

**CNR.No.TNCBoA-037746/2022**

அரசு

பிரதிநிதியாக, காவல் உதவி ஆய்வாளர்,

E-1 சிங்காநல்லூர் (குற்றப்புலனாய்வு பிரிவு) காவல் நிலையம்,

குற்ற எண் 104/2022. ....குற்றமுறையீடுபவர்

//எதிராக//

1. திரு. நாகராஜ் (வயது 22),

த/பெ. முனியசாமி,

கதவு எண் - 45, அத்தி குட்டை,

அண்ணா நகர் தோட்டிப்பாளையம்,

சின்னியம்பாளயைம்,

கோவை.

2. திரு. ரோகன் (எ) ஜஸ்டிஸ் (வயது 29),

த/பெ. ரஜினி காந்த்,

கதவு எண் - 206/4, அய்யப்பன் கோவில் தெரு,

சுந்தரராஜபுரம், ராஜபாளையம்,

விருதுநகர்.

தற்போதைய முகவரி

ஆர்.வி. மருத்துவமனை அருகில்,

சின்னியம்பாளையம்,

கோவை. ...எதிரிகள்

<table>
<tr><th colspan="4">வழக்கு விவரங்களின் சுருக்கம்</th></tr>
<tr><th>வ.எண்</th><th>விளக்கங்கள்</th><th colspan="2">விவரங்கள்</th></tr>
<tr><td>1.</td><td>2 வது எதிரியின் அடைப்பு காவல் காலம்</td><td colspan="2">10.07.2022 முதல் 04.08.2022 வரை மீண்டும் 21.07.2026 முதல் இன்று வரை<br>10.07.2022 முதல் 10.08.2022 வரை மீண்டும் 21.07.2026 முதல் இன்று வரை</td></tr>
<tr><td>2</td><td>இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="2">14.09.2022</td></tr>
<tr><td>3.</td><td>மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கு சமர்பிக்கப்பட்ட நாள்</td><td colspan="2">பொருந்தாது</td></tr>
<tr><td>4.</td><td>கு.வி.மு.ச பிரிவு 240 ன் கீழ் 2 வது எதிரியிடம் கேள்விகள் கேட்கப்பட்ட நாள்</td><td colspan="2">04.09.2023</td></tr>
<tr><td>5.</td><td>குற்ற வழக்கு பல்வகை மனுக்களின் விவரங்கள்</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td rowspan="2">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1 – 17.03.2026</td><td>அ.சா.1 – 17.03.2026</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அ.சா.2 – 17.03.2026 | அ.சா.2 – 17.03.2026 |
| | | அ.சா.3 - 06.08.2026 | அ.சா.3– 06.08.2026 |
| 7. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் எதிரிகளிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | 10.08.2026 | |
| 8. | எதிரி தலைமறைவாக இருந்தது மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலையானது/முன்னிலைபடுத்தப்பட்டது குறித்த விவரங்கள் | எதிரிகள் இருவரும் வழக்கு விசாரணைக்காலத்தில் தலைமறைவானதால் அவர்களுக்கு எதிராக பிணையில்லா பிடியாணை நிறைவேற்றம் செய்யப்பட்டு கடந்த 21.07.2026 முதல் சிறையில் இருந்து வருகிறார்கள். | |
| 9. | மேல்நிலை நீதிமன்றங்களின் தடை உத்தரவு மற்றும் முடிவுகள் குறித்த விவரங்கள் | இல்லை | |

இந்த வழக்கானது கடந்த 23.03.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.08.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. M. ஷெரின் சித்தாரா ஸ்வீட்டி, அவர்கள் முன்னிலையாகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அவர்கள் முன்னிலையாகியும் R. கண்ணதாசன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தின் சீரான

பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு கோப்பின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் கருத்தில் கொண்டு இந்த நீதிமன்றம் வழங்கும் இறுதி

**<u>தீர்ப்புரை</u>**

<u>1. குற்றமுறையீடுபவர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் சுருக்கம் :</u>

கடந்த 28.01.2022 ஆம் தேதி மதியம் 14.30 மணிக்கு மேல் 18.00 மணிக்குள் வாதி பத்மநாபன் என்பவர் புதிதாக கட்டி வரும் கதவு எண் 10 பெரியார் நகர் மசக்காளிப்பாளையம் என்ற விலசாத்தில் கட்டிட பணியை பார்க்க வாதிக்கு சொந்தமான TN 66 J 4636 என்ற பதிவெண் கொண்ட HONDA ACTIVA வண்டியை கட்டிடத்தின் முன்புற ரோட்டில் நிறுத்தியிருந்ததை எதிரிகள் இருவர் மற்றும் இளஞ்சிறாருடன் ஒருவருக்கொருவர் உடந்தையாக திருட வேண்டும் எனும் நோக்கில் திருடிச் சென்று குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது இதச பிரிவு 379 உ/இ 34 -ன் கீழ் குற்றம் புரிந்ததாக கூறி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2. எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டதும் அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் இறுதி அறிக்கையை விளக்கி எதிரிகள் மீது இதச பிரிவு 379 உ/இ 34-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவி கேள்விகள் கேட்கப்பட்டு அதனை எதிரிகள் மறுத்துரைத்ததால் வழக்கானது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் வழக்கு விசாரணையின் போது எதிரிகள் இருவரும் தலைமறைவானதால் அவர்களுக்கு எதிராக பிணையில்லா பிடியாணை

நிறைவேற்றம் செய்யப்பட்டு கடந்த 21.07.2026 முதல் சிறையில் இருந்து வருகிறார்கள்.

3. எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்ததால் இந்த வழக்கில் அரசு தரப்பில் சாட்சியங்களை முன்நிறுத்தி முழுவிசாரணை மேற்கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3 வரை விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரை அரசு தரப்பு சான்றாவணங்களாகவும் அ.சா.பொ.1 அரசு தரப்பு சான்று பொருளாகவும் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் எந்தவொரு சாட்சிகளும் ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>4. அரசு தரப்பில் சாட்சியங்கள் மூலம் முன்நிறுத்தப்படும் வழக்கின் சுருக்கம்</u>

i. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான பத்மநாபன் என்பவர் வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டார். பட்டியல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 திரு. மனோகரன் என்பவர் கடந்த 28.01.2022 தனது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது கூட்டமாக இருந்துள்ளது. அன்றைய தினம் மதியம் 02.00 மணியளவில் பத்மநாபன் கட்டிடத்திற்கு அருகே அவரது TN 66 J 4636 என்ற பதிவெண் கொண்ட Honda Activa என்ற இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்த போது மேற்படி வாகனத்தை காணவில்லை என்று பாதிக்கப்பட்ட சாட்சி பத்மநாபன் கூறியுள்ளார்.

ii. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட சாட்சி கடந்த 02.02.2022 அன்று 21.30 மணிக்கு சிங்காநல்லூர் காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்த தகவலினை புகார்

மனுவாக அளித்துள்ளார். அப்போது காவல் நிலைய பொறுப்பில் இருந்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. நல்லகுரு என்பவர் அ.சா.1 கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 104/2022 சட்டப்பிரிவு 379 இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். பின்னர் வழக்கை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார்.

iii. பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் கடந்த 03.02.2022 அன்று காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.2 நவநீத கிருஷ்ணன் மற்றும் ராஜூ ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம்அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகள் பத்மநாபன், செந்தில், அ.சா.1 மனோகரன், அ.சா.2 நவநீதிகிருஷ்ன், ராஜு மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் நல்லகுரு ஆகியோகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iv. பின்னர் வழக்கு சொத்தை மீட்க தேடி வந்த நிலையில் 10.07.2022 அன்று இருகூர் பகுதியில் ரோந்து அலுவலில் இருந்த போது தீபம் நகர் சந்திப்பில் இருசக்கர வாகனத்தில் வந்த மூவரை சந்தேகத்தின் பேரில் பிடித்த விசாரித்த போது நாகராஜ், கணேஷ்ராஜ்(எ) ஜக்கு, ரோஷன்(எ) ஜஸ்டின் என்றும் அவர்கள் ஓட்டி வந்த வாகனம் திருட்டு வாகனம் என்பது தெரிந்து மேலும் அவர்களை விசாரிக்க குற்றங்களை

ஒப்புக் கொண்டதால் அதே இடத்தில் 08.30 மணிக்கு மூவரையும் கைது செய்துள்ளார்.

v. பின்னர் எதிரிகள் கணேஷ்ராஜ் மற்றும் நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆஜர் சாட்சிகள் விமல்ராஜ் மற்றும் அஜித் ஆகியோர்கள் முன்னிலையில் 08.30 மணி முதல் பதிவு செய்துள்ளார். கணேஷ் ராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி " TN 43 J 4023 வண்டியை ஒப்படைக்கிறேன். என்னை கூட்டிச் சென்றால் சித்ரா அருகில் உள்ள Trilok அபார்ட்மெண்ட்மெண்டில் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டின் மறைவில் மறைத்து வைத்துள்ள இரண்டு பைக்கை எடுத்து உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்பது அ.சா.ஆ. 5 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர்அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

vi. பின்னர் ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் அன்றைய தினம் 12.00 மணிக்கு கோவை சித்ரா Trilok அபார்ட்மெண்ட் அருகில் நிறுத்தியிருந்த TN 66 J -4636 என்ற கிரே கலர் Honda Activa வாகனம், TN 37-DK -4248 Yamaha MT மற்றும் TN 36 BZ 9581- Bullet வாகனத்தையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91-மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN 66 J - 4636 என்ற கிரே கலர் Honda Activa வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

vii. பின்னர் எதிரி கணேஷ்ராஜ் (எ) ஜக்கு என்பவர் சம்பவத்தின் போது இளஞ்சிறார் என்பதால் அவர் மீது இளஞ்சிறார் நீதி குழுமத்தில் அறிக்கை அனுப்பியும், மற்ற இரண்டு எதிரிகள் நாகராஜ் , ரோகன் (எ) ஜஸ்டின் என்பவரின் மீது இதச பிரிவு 379 லிருந்து 379 உ/இ 34 என சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை பதிவு செய்துள்ளார். சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை பொறுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எடுத்துக் கூறி வினவிய போது எதிரிகள் அதனை மறுத்துரைத்து அரசு தரப்பு சாட்சியம் உண்மை இல்லையென்றும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

<u>6. வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் எந்தவித ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

இதச பிரிவு 379 உ/இ 34 : எதிரிகள் இருவரும் ஒருவருக்கொருவர் உடந்தையாக இருந்து பொதுவான உட்கருத்துடன் வாதிக்கு சொந்தமான TN 66 J 4636 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றதற்கான குற்றச்சாட்டு.

7. விவாதங்கள்

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்கு சான்று ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட்டன. சம்பவ நாள் மற்றும் நேரத்தின்போது சம்பவ இடத்தில் வாதி பத்மநாபன் என்பவருக்கு சொந்தமான TN 66 J 4636 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தை எதிரிகள் இருவரும் இளஞ்சிறார் ஒருவருடன் சேர்ந்து பொதுவான உட்கருத்துடன் திருடிச் சென்றதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

8. எதிரிகள் மீதான குற்றச்சாட்டை மெய்ப்பிக்க வேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரான பத்மநாபன் என்பவர் அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படுவதற்கு முன்பே இறந்து போய்விட்டார். எனவே, அரசு தரப்பில் மற்ற பட்டியல் சாட்சிகளில் சம்பவத்தை நிகழ்நிலைப்புகார்தாரர் கேள்வியுற்ற சாட்சியாக அ.சா.1 மனோகரன் என்பவரும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக அ.சா.2 நவநீத கிருஷ்ணன் என்பவரும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளராக பணியிலிருந்த அ.சா.3 திரு. கார்த்திகேயன் அவர்களும் அரசு தரப்பில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

9. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்டுள்ள மற்ற சாட்சிகள் எவரும் அவர்களுடைய வசிப்பிடத்தில் வசிக்கவில்லை என்பதாலும் உரிய முயற்சி எடுத்து அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதாலும் அவர்களுடைய சாட்சிய விசாரணைகளுக்கு விளக்களிக்குமாறு அரசு தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி மற்ற சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யவில்லை.

10. முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 தன்னுடைய சான்றுரையில் கடந்த 28.01.2022 அன்று தனது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது கூட்டமாக இருந்தது என்றும், அன்றைய தினம் மதியம் 02.00 மணியளவில் பத்மநாபனுக்கு சொந்தமான இருசக்கரவாகனம் திருடு போனதாகவும், அதன் காரணமாக, பத்பநாபன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையை உறுதி செய்யும் வகையில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 நவநீத கிருஷ்ணன் சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்ட காவல் துறையினரின் விசாரணை குறித்து நம்பத்தகுந்த வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியத்தை உறுதி செய்யும் வகையில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 திரு. கார்த்திகேயன் அவர்கள் புகார் பெற்று முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தது குறித்தும் சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. எனவே, முன்னிலைப்படுத்தப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள் ஒன்றோடொன்று உறுதி செய்யும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதால் சம்பவ நாள் மற்றும் நேரத்தின்போது சம்பவ இடத்திலிருந்து வாதிக்கு சொந்தமான இருசக்கர வாகனம் திருடுபோயுள்ளது என்ற பொருண்மை எவ்வித நியாயமான ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது தெளிவாக தெரிய வருகிறது.

13. இருப்பினும், அக்களவு குற்றத்தை எதிரி தான் செய்தார் என முடிவு செய்வதற்கு அரசு தரப்பில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 ன் ஒற்றை சாட்சியம் மட்டுமே காணப்பட்டுள்ளது. அ.சா.3 ன் வாய்மொழி சாட்சியத்தை தவிற அரசு தரப்பில் மற்ற சாட்சிகள் குறிப்பாக எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொல்கிற போதும் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாக சொல்கிறபோதும் சாட்சிகளாக இருந்ததாக கூறப்படுகிற சாட்சிகள் எவரும் இவ்விசாரணை நீதிமன்றத்தின் முன் அரசு தரப்பால் ஆஜர்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

14. **எனவே, எதிரிகள் மீதான திருட்டு குற்றச்சாட்டானது புலன் விசாரணை அதிகாரியின் உறுதிப்படுத்தப்படாத சாட்சியத்தால் அரசு தரப்பில் மெய்ப்பிக்க தவறி விட்டதாக தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, எதிரிகள் மீதுள்ள**

**குற்றச்சாட்டு அரசு தரப்பில் ஐயம் திரிபு அற நிரூபிக்க தவறியதால் எதிரிகள் இதச பிரிவு 379 உ/இ 34 - ன் கீழ் குற்றவாளி இல்லையென்று தீர்மானித்து எதிரிகள் இருவரையும் கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

15. வழக்கு சொத்தான அ.சா.பொ.1 Honda Activa என்ற இருசக்கர வாகனம் இடைக்கால பொறுப்பில் நிகழ்நிலைப்புகார்தாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வாகனத்தை அவரே வைத்துக்கொள்ளவும் அதுகுறித்து அவரால் இயற்றப்பட்ட பிணை பத்திரம் மேல் முறையீடு காலத்திற்கு பின்பு ரத்து செய்யப்படுகிறது. எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து வருவதால் பிணை குறித்த உத்தரவு எதுவும் இல்லை..

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 10.08.2026 திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/-திரு.ஆ.வெங்கடேஷ்குமார்,**
நீதித்துறை நடுவர் எண் 3
கோவை.

<u>அரசு தரப்பு சாட்சிகள் பட்டியல் :</u>

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை | சாட்சிகளின் பெயர் | விவரிப்பு |
|---|---|---|
| அ.சா.1 | திரு. மனோகரன் | சம்பவ சாட்சி |
| அ.சா.2 | திரு. நவநீத கிருஷ்ணன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு. கார்த்திகேயன் | புலன் விசாரணை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் :**

| அரசு தரப்பு சான்றாவண வரிசை எண் | சான்றாவணத்தின் விவரிப்பு | நிரூபணம் / குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | படிவம் -91 | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | சட்ட மாறுதல் அறிக்கை | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் பட்டியல் :**

| அரசு தரப்பு சான்று பொருள் | சான்று பொருளின் விவரிப்பு | நிரூபணம் / குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.பொ.1 | TN 66 J 4636 என்ற பதிவெண் | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| | கொண்ட HONDA ACTIVA இருசக்கர வாகனம் | |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**ஒம்/-திரு.ஆ.வெங்கடேஷ்குமார்,**

நீதித்துறை நடுவர் எண் 3

**கோவை.**

குறிப்பு:

1. எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கும் நிகழ்நிலை புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

**ஒம்/-திரு.ஆ.வெங்கடேஷ்குமார்,**

நீதித்துறை நடுவர் எண் 3

**கோவை.**

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர் எண் 3

கோவை.